Date: 07.03.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

EA.8/22 in EP.26/2013 in ARC.1/2010

வா.சா.**2**

**பெயர்-** திரு. பாலசுப்பிரமணியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**நான் டிப்ளமோ படித்துள்ளேன். நான் இந்நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வெங்கடேசன் தான் என்னை சாட்சி சொல்ல கூட்டி வந்தார். நான் மிட்டா மண்டகபட்டு கிராமத்தை சேர்ந்தவர்தான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மொட்டய உடையாரும் அவரது பிள்ளைகளும் அவர்களது குடும்ப சொத்துக்களை பொருத்து ஏற்படுத்திக்கொண்ட பாகபிரிவினை ஆவணம் ம.சா.ஆ.4 என்றால் சரிதான். எ அட்டவணை சொத்து மொட்டய உடையாருக்கும், பி அட்டவணை சொத்து வெங்கடேசனுக்கும் சி அட்டவணை சொத்து மணவாளனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பிரமாணவாக்குமூலத்தில் சொல்லப்பட்ட வாசகங்கள் அனைத்தும் வெங்கடேசனால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார்செய்யப்பட்டது என்றும் அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2003ல் பாகபிரிவினை மற்றும் பாகபத்திரம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும். இதில் 5வது பாராவில் முதல் 3வது வரியில் மொட்டய உடையாரின் மேற்படி ரைஸ்மில், களம், குடோன் உள்ள சுமார் 1 ஏக்கர் 63 செண்ட் இடத்தையும் அவருக்கு பாத்தியமான சுமார் 13 செண்ட் அளவுள்ள கிராமநத்தம் வீட்டையும்**

நீக்கி மற்ற நிலங்களை 3 மகன்களுடன் சேர்ந்து 2003 ல் ஒரு பாக பிரிவினை பத்திரம் செய்து கொடுத்துவிட்டார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பாகபிரிவினை பத்திரத்தில் 1 ஏக்கர் 63 செண்ட் இடம் நீக்கப்பட்டதாகவோ, அல்லது மொட்டைய உடையாருக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. இதுசம்மந்தமாக தெரியாமல் தான் 5 வது பத்தியிலும் 6 வது பத்தியிலும் தெரிவித்துள்ளேன் என்றும் எனக்கு பிரமாண வாக்குமூலம் 5 மற்றும் 6வது பத்தியில் உள்ள விவரம் தெரியாது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையெழுத்து மொட்டைய உடையாருடையது தான். ம.சா.ஆ.25 ஆவணத்தில் உள்ள கையெழுத்து மொட்டைய உடையாருடையது போல் உள்ளது தற்போது சாட்சி அது மொட்டைய உடையாருடையதுதான் என்று மாற்றி கூறுகிறார். ம.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள மொட்டைய உடையார் கையெழுத்துக்கும் ம.சா.ஆ.25 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது என்றால் ஒன்றுபோலதான் உள்ளதாக தெரிகிறது. ம.சா.ஆ.25 ஆவணத்தில் உள்ள மொட்டைய உடையார் என்ற கையெழுத்தில் ஒவ்வொரு எழுத்திற்கும் இடையே நிறைய இடைவெளி உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணத்தில் அவ்வாறு இடைவெளி இல்லை. நான் வெங்கடேசனின் பாகபிரிவினை சம்மந்தமாக வீட்டிலும், மில்லிலும் பிரச்சனை உள்ளது அது சம்மந்தமாகதான் சாட்சி சொல்ல வந்தேன். வேறு எதுபற்றியும் சாட்சி சொல்ல வரவில்லை. எனக்கு பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியாது என்றும் எதற்காக சாட்சி சொல்ல வந்தேன் என்றும் தெரியாது என்றும் வெங்கடேசனுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு என்னுடைய முதல் விசாரணை வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியாது என்றும் இந்த வாக்குமூலமே வெங்கடேசன் வழக்கறிஞருக்கு சொல்லி தயார் செய்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நானும், மனுதாரர் வெங்கடேசன், 2ம் எதிர்மனுதாரர் வீரபத்திரன், ம.சா.3ன் கணவர் தண்டபாணி ஆகிய அனைவரும் சேர்ந்து கொண்டு 1ம் எதிர்மனுதாரர் ஏலத்திற்கு கொண்டுவரும்

**சொத்தில் துர்லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ம.சா. ஆ 25 தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா. ஆ 25ல் உள்ள மொட்டைய உடையாரின் கையெழுத்து அவருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வெங்கடேசனுக்கு அனுசரணையாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

மறுவிசாரணை இல்லை